*வறட்சியால் பயிர் பாதிப்பு*

# 6 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.560 கோடி இழப்பீடு: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப்.22–

**வறட்சியால் மகசூல் பாதிக்கப்பட்டதால் தமிழகத்தில் 6 லட்சம் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் ரூ.560 கோடி இழப்பீடு வழங்கப்பட உள்ளதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் இழப்பில் இருந்து விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க பயிர் காப்பீட்டு திட்டம் தமிழ்நாட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2022–23ம் ஆண்டில் இந்த திட்டம் சென்னையை தவிர்த்து 37 மாவட்டங்களை உள்ளடக்கி 14 தொகுப்புகளில் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம், இப்கோடோக்கியோ, பஜாஜ் அலையன்ஸ், எச்.டி.எப்.சி எர்கோ மற்றும் ரிலையன்ஸ் பொது காப்பீட்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டது.

**24.45 லட்சம் ஏக்கர் நிலம் காப்பீடு**

இந்த திட்டத்தின் கீழ் சம்பா நெல் பயிரில், 11.20 லட்சம் விவசாயிகளால் 24.45 லட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டது.

மொத்த காப்பீட்டு கட்டணத்தில் தமிழ்நாடு அரசின் காப்பீட்டு கட்டண மானியமாக ரூ.1,375 கோடியும், ஒன்றிய அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.824 கோடியும் விவசாயிகளின் பங்குத் தொகையாக ரூ.120 கோடியும் என மொத்தம் ரூ.2,319 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

2022–2023ம் ஆண்டு சம்பா பருவ நெல் சாகுபடியில் 46 லட்சம் டன் உற்பத்தி அடையப்பட்ட போதிலும், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்த காரணத்தால் ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, தென்காசி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட மிதமான வறட்சியால் 3 லட்சத்து 52 ஆயிரத்து 797 ஏக்கர் பரப்பளவில் 33 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ.181.40 கோடி தொகையை தமிழ்நாடு அரசு ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 275 விவசாயிகளுக்கு கடந்த 4ந்தேதி வழங்கியது.

இதனை தொடர்ந்து தற்போது பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் 37 மாவட்டங்களில் வறட்சி, வெள்ளம், புயல், பருவம் தவறிய மழை போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் சுமார் 7 லட்சம் ஏக்கர் பரப்பளவிலான மகசூல் இழப்புக்காக இழப்பீட்டு தொகையாக மொத்தம் ரூ.560 கோடி வழங்கப்பட உள்ளது.

இந்த இழப்பீட்டு தொகை சுமார் 6 லட்சம் தகுதி வாய்ந்த விவசாயிகளின் வங்கிக்கணக்குகளில் வரவு வைக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கேரள ஓணம் லாட்டரி: திருப்பூரை சேர்ந்த 4 பேருக்கு ரூ.25 கோடி பரிசு

திருவனந்தபுரம்,செப்.22–

கேரள அரசின் ஓணம் பம்பர் குலுக்கல் அதிர்ஷ்டசாலி யாரென்று தெரிந்தது. திருப்பூரை சேர்ந்த 4 பேர் எடுத்த சீட்டுக்கு ரூ.25 கோடி பரிசு விழுந்தது.

கேரளாவில் வாரத்தில் 7 நாட்களும் லாட்டரி குலுக்கல் நடைபெற்று வருகிறது. இவை தவிர பண்டிகை நாட்களையொட்டி சிறப்பு பம்பர் லாட்டரி குலுக்கலும் நடைபெறும். அந்த வகையில் நடப்பாண்டு ஓணம் பண்டிகையையொட்டி ஓணம் பம்பர் லாட்டரி குலுக்கலுக்காக 85 லட்சம் டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட்டிருந்தது. இதில் 75 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனை யாகியிருந்தது. இது கடந்த ஆண்டு ஓணம் பம்பர் விற்பனையை விட 9 லட்சம் அதிகமாகும்.

ஓணம் பம்பர் முதல் பரிசு ரூ.25 கோடியாகும். 2ம் பரிசு ரூ.1 கோடி வீதம் 20 பேருக்கும், 3ம் பரிசு ரூ.50 லட்சம் வீதம் 20 பேருக்கும், இவை தவிர மொத்தம் 5 லட்சத்து 35 ஆயிரம் பரிசுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் மொத்த பரிசு தொகை ரூ.125 கோடியே 54 லட்சம் ஆகும். இதில் ஒரு டிக்கெட்டின் விலை ரூ.500 என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் லாட்டரி பிரியர்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்த ஓணம் பம்பர் குலுக்கல் முடிவுகள் நேற்று முன்தினம் பிற்பகல் வெளியிடப்பட்டது.

இதில் முதல் பரிசு ரூ.25 கோடி பாலக்காடு வாளையாரில் விற்பனையான சீட்டுக்கு கிடைத்தது. அந்த லாட்டரி எண் TE 230662 ஆகும். ஆனால் முதல் பரிசு ரூ.25 கோடி பெற்ற அதிர்ஷ்டசாலி யார்? என்பது தெரியாமல் இருந்தது.

தமிழகத்தை சேர்ந்தவர் எடுத்துச் சென்ற லாட்டரிக்கு முதல் பரிசு விழுந்த விவரம் மட்டும் தெரிந்திருந்தது. இந்தநிலையில் நேற்று திருப்பூரை சேர்ந்த நடராஜன் உள்பட 4 பேர் ஒன்றாக சேர்ந்து எடுத்த டிக்கெட்டுக்கு ரூ.25 கோடி பரிசு விழுந்த தகவல் தெரிய வந்தது.

அதாவது அந்த டிக்கெட்டுடன் 4 பேரும் நேற்று திருவனந்தபுரம் லாட்டரி இயக்குனரக அலுவலகத்திற்கு நேரில் வந்து பரிசு வினியோக பிரிவில் ஒப்படைத்தனர். பாலக்காட்டில் சிகிச்சை பெற்று வந்த நபரை சந்தித்து நலம் விசாரித்து விட்டு திருப்பூர் திரும்பும் வழியில் வாளையாரில் எடுத்த 3 டிக்கெட்டில் ஒரு டிக்கெட்டுக்கு ரூ.25 கோடி முதல் பரிசு கிடைத்ததாக அவர்கள் லாட்டரி அலுவலகத்தில் தெரிவித்துள்ளனர்.

# கோவை மத்திய சிறையில் கைதிகள், வார்டர்கள் இடையே பயங்கர மோதல்; 11 பேர் காயம்

கோவை, செப்.22

**கோவை மத்திய சிறையில் கைதிகள், வார்டர்கள் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. இதில் கைதிகள் மரத்தில் ஏறி கைகளை அறுத்து கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இந்த மோதலில் மொத்தம் 11 பேர் காயமடைந்தனர்.**

இந்த சம்பவம் குறித்து போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:

கோவை மத்திய சிறையில் விசாரணை கைதிகள், தண்டனை கைதிகள் என மொத்தம் 2,400 கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். வால்மேடு பிளாக் பகுதியில் குற்ற வழக்குகளில் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் 600 பேர் பல்வேறு அறைகளில் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர்.

இதில் 7 கைதிகள் ஒரு குழுவாக செயல்பட்டதாக கூறப்படுகிறது. இதனால் அவர்களுக்கும் சிறை வார்டர்களுக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்ததாக தெரிகிறது. மேலும் சிறையில் அடிக்கடி சோதனை நடத்துவது தொடர்பாகவும் அவர்கள் இடையே பிரச்சினை இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு, 7 பேர் குழுவில் இருந்த 2 கைதிகளை பிரித்து வேறு பகுதியில் அடைக்க அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டதாக தெரிகிறது. இதற்கு 7 பேர் குழுவை சேர்ந்த கைதிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை 6 மணியளவில் வழக்கம்போல் கைதிகளின் அறைகளை சிறை வார்டர்களான ராகுல், பாபுஜான், மோகன்ராம் மற்றும் விமல்ராஜ் ஆகியோர் திறந்து விட்டனர். அப்போது அந்த 7 பேர் குழுவை சேர்ந்த கைதிகள் திடீரென வார்டர்களை சரமாரியாக தாக்கினர். அதேநேரம் மேலும் சில கைதிகளும் வார்டர்களை தாக்க தொடங்கினர்.

இதனால் வார்டர்கள் திருப்பி தாக்க முயன்றனர். இதையடுத்து கைதிகள்–வார்டர்கள் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டு, அந்த இடமே போர்க்களமாக மாறியது. இதனிடையே சத்தம் கேட்டு வந்த மற்ற வார்டர்கள் விரைந்து வந்து கைதிகளிடம் சிக்கிய வார்டர்களை மீட்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. இதையடுத்து சிறை வார்டர்கள் மற்றும் போலீசார் தடி அடி நடத்தி கைதிகளை கலைந்து போக செய்து வார்டர்களை மீட்டனர். கைதிகள் தாக்கியதில் வார்டர்களின் சட்டை கிழிந்ததுடன், லேசான காயம் அடைந்தனர்.

இதற்கிடையில் அந்த 7 பேர் குழுவை சேர்ந்த கைதிகள் திடீரென சிறை வளாகத்தில் இருந்த மரத்தில் ஏறி வார்டர்களை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர். திடீரென அவர்கள் தங்களுக்கு முகச்சவரம் செய்வதற்காக கொடுக்கப்பட்ட பிளேடால் கைகளை அறுத்துக்கொண்டனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவியது.

உடனடியாக இதுகுறித்து சிறை வார்டர்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். தொடர்ந்து சிறை அதிகாரிகள் கூடுதல் போலீசாரை பாதுகாப்புக்கு அனுப்பி வைக்குமாறு கோவை மாநகர போலீஸ் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டனர். அதனைத்தொடர்ந்து 20க்கும் மேற்பட்ட மாநகர போலீசார் கோவை மத்திய சிறைக்கு விரைந்தனர்.

அவர்களுடன் சிறைத்துறை டி.ஐ.ஜி. சண்முகசுந்தரம், சிறை சூப்பிரண்டு ஊர்மிளா ஆகியோர் மோதல் நடந்த வால்மேடு பிளாக் பகுதிக்கு விரைந்து சென்று மரத்தில் ஏறிய கைதிகளை கீழே இறங்குமாறு எச்சரிக்கை விடுத்தனர். இதைத்தொடர்ந்து 7 கைதிகளும் அரைமணிநேரம் கழித்து மரத்தில் இருந்து கீழே இறங்கினார்கள்.

பின்னர் பிளேடால் கைகளை அறுத்தும், தடியடியில் காயமடைந்த கைதிகள் 7 பேர் சிகிச்சைக்காக சிறையில் உள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் கைதிகள் தாக்கியதில் காயமடைந்த வார்டர்கள் ராகுல், மோகன்ராம், பாபுஜான், விமல்ராஜ் ஆகியோர் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த நிலையில் கோவை மத்திய சிறையில் வால்மேடு பிளாக் பகுதிக்கு கோவை வடக்கு போலீஸ் துணை கமிஷனர் சந்தீஷ், உதவி கமிஷனர் சரவணன், ரேஸ்கோர்ஸ் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆர்.அர்ஜூன்குமார் மற்றும் போலீசார் விரைந்து வந்து நிலைமை கட்டுக்குள் இருப்பதை உறுதி செய்தனர். தொடர்ந்து மோதல் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


## FIVE STAR BUSINESS FINANCE LIMITED

CIN: L65991TN1984PLC010844.
Regd & Corpoate Office : New No.27 Old No.4 Taylor's Road, Kilpauk, Chennai - 600 010
Email: secretary@fivestargroup.in Website: www.fivestargroup.in Tel: +91 44 46106200

**NOTICE OF LOSS OF SHARE CERTIFICATE**

1. Ramadoss Naidu.M Son of Late. Mannar Naidu residing at No.46 Tank Street, Poonamallee, Chennai - 600 056 2. Manavalan.M Son of Late. Mannar Naidu resding at No.1/80 Srinagar Main Road, Poonamallee, Chennai - 600 056 3. Mohan.R S/o. Ramadoss Naidu.M residing at No.46 Kulakarai Street, Poonamallee, Chennai - 600 056 4. Udayakumar.R S/o.Ramadoss Naidu residing at No.46 Kulakarai Street, Poonamallee, Chennai - 600 056 the registered holders of the undermentioned shares held in the above said company, Notice is hereby given that the following Share Certificates issued by the company have been reported lost or misplaced or stolen and the registered holders thereof/claimants thereto have applied to the company for the issue of Duplicate Certificates

| Sl.No | Name of Shareholders | Folio No. | Share Certificate No | Distintive Nos | | No.of Shares |
|---|---|---|---|---|---|---|
| | | | | From | To | |
| 1 | Ramadoss Naidu.M | 47 | 6 | 71001 | 78000 | 7000 |
| 2 | Manavalan.M | 46 | 5 | 66001 | 71000 | 5000 |
| 3 | Mohan.R | 498 | 50 | 222701 | 226700 | 4000 |
| 4 | Udavakumar.R | 1164 | 144 | 517201 | 524200 | 7000 |
| | | | | Total | | 23000 |

Any person(s) who has have any claim(s) in respect of the said Share Certificates should lodge claim(s) with the company at it corporate office at the address New no.27 Old No.4 Taylor's Road, Kilpauk, Chennai - 600 010 within 15 days of publication of this notice after which no claim will be entertained and the Company will proceed to issue duplicate Share Certificates .

Sd/-
1. RamadossNaidu.M
2. Manavalan,M
3. Mohan R
4. Udayakumar.R

Date : 22.09.2023



**பொது அறிவிப்பு**

பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் எனது கட்சிக்காரர் திரு. A. ராஜா த/பெ ஆறுமுகம் பல்லாவரம், சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண் 5893 / 2011 தேதி 03.10.2011 ஆவண எண் 6742 / 2011 தேதி 04.11.2011 ஆகிய இரண்டு அசல் விற்பனை பத்திரங்களில் 9 ம் (ஒன்பதாம்) பக்கங்களை மட்டும் தொலைத்து விட்டார். அதனை கண்டெடுப்பவர் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணிற்கு ஏழு நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்து கொள்கிறேன்.

**V.SRINIVASALU Advocate**
**No.7/10, Kambar Street, Muthamil Nagar, Pammal chennai - 600075.**
**7010430149**


# மாநிலங்களவையிலும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேறியது



**பாராளுமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய மாநிலங்களவை பெண் எம்.பி.க்கள் பிரதமர் மோடிக்கு பூங்கொத்து கொடுத்தும், இனிப்பு வழங்கியும் வாழ்த்துகள் தெரிவித்தனர். மேலும், அவர்கள் அனைவரும் பிரதமர் மோடியுடன் சேர்ந்து நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.**

புதுடெல்லி, செப்.22–

மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையை தொடர்ந்து நேற்று மாநிலங்களவையிலும் நிறைவேறியது.

மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா, நேற்று முன்தினம் மக்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து மாநிலங்கள வையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீது பல்வேறு கட்சிகளின் எம்.பி.க்கள் பேசினர். இதில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பேசும்போது கூறியதாவது:

நாம் ஒரு புதிய வளாகத்திற்கு வந்துள்ளோம், நாடாளு மன்றத்துக் கான புதிய கட்டிடம், புதிய இந்தியா. அடுத்த 100 ஆண்டுகளுக்காக கட்டப்பட்டுள்ள இந்த புதிய நாடாளுமன்றத்தில் முதல் மசோதாவாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படுவது மிகச்சிறந்த தொடக்கம் ஆகும்.

மசோதா தொடர்பாக நாம் ஒருமித்த கருத்தை உருவாக்குவதும், பெண்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டலுக்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் என்பதைக் காட்டுவதும் முக்கியம்.

இவ்வாறு நிர்மலா சீதாராமன் கூறினார்.

இந்த மசோதா மீது பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, மசோதாவுக்கு முழு ஆதரவு தெரிவித்தார். அவர் பேசும்போது கூறியதாவது:– இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். ஆனால் ஒரேயொரு அதிருப்தி. அதாவது தொகுதி வரையறைக்குப்பின்னரே இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும் என்று கூறும் 5வது பிரிவு. அத்துடன் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பின்னர் தான் தொகுதி மறுவரையறை செய்யப்படும் என்றும் கூறப்பட்டு உள்ளது.

இடஒதுக்கீட்டை அமல்படுத்து வதை தொகுதி மறுவரையறை மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்புடன் இணைக்கக்கூடாது. இந்த மசோதாவுக்கு நாங்கள் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகிறோம். ஏனெனில் இது நிறைவேற்றப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இவ்வாறு மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்தார்.

இதைப்போல இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை மசோதாவில் ஏன் இணைக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

முன்னதாக தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் மசோதாவை ஆதரித்து பேசினர்.

இரவில் மாநிலங்களவைக்கு வந்த பிரதமர் மோடி, இந்த மசோதா குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அவர் கூறும்போது, ‘இந்த மசோதா நாட்டு மக்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். அனைத்து உறுப்பினர்களும், அரசியல் கட்சிகளும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும், பெண் சக்தியை மேம்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டுக்கு வலுவான செய்தியை வழங்குவோம்’ என கூறினார்.

11 மணி நேர விவாதத்துக்குப் பின்னர் இரவில் மசோதா மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதா நிறைவேற்றப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 215 உறுப்பினர்கள் வாக்களித்தனர். யாரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

கூட்டத் தொடர் முடிந்து வெளியே வந்த பிரதமர் மோடிக்கு அனைத்து எம்.பி.க்களும் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேறியதும் பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் நிறைவடைந்தது. அதன்பின் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.





# ‘ஆவின்’ மையத்தில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் 62 செயலாட்சியர்களுக்கு பயிற்சி வகுப்பு

## அமைச்சர் மனோ தங்கராஜ் துவக்கி வைத்தார்

சென்னை, செப்.22–

சென்னை மாதவரம் பால்பண்ணை யிலுள்ள ஆவின் திறன் மேம்பாட்டு மையத்தில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாட்சியர்களுக்கான பயிற்சி வகுப்பினை துவக்கி வைத்தார்.

முதற்கட்டமாக செப்டம்பர் 12–ந் தேதி அன்று பயிற்சி வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சென்னை, ஆவின் திறன் மேம்பாட்டு மையம், மாதவரம் பால் பண்ணையில் ஒரு நாள் பயிற்சி வகுப்பில் திருச்சி, பெரம்பலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கரூர், அரியலூர், திருவாரூர் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த சரக துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் பொது மேலாளர்கள் மற்றும் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் செயலாட்சியர்களாக பொறுப்பு வகிப்பவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி வகுப்பில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்குதல், உறுப்பினர்களுக்கு உரிய பால் தொகை வழங்குதல், புதிய கறவை மாடுகள் வாங்க கடன் வழங்குதல், புதிய சங்கங்களை உருவாக்குதல், தொடக்க சங்கங்களை லாபத்தில் செயல்படுத்துவதற்கான உத்திகள், செயலாட்சியரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், சட்டப்பூர்வ விதிமுறைகள், பால் கூட்டுறவு தணிக்கை, வளங்களை முழுமையாக பயன்படுத்துதல், சமநிலைப்புள்ளியினை எட்டுதல், தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் மொத்தம் 62 நபர்கள் கலந்துக்கொண்டு பயனடைந்தனர்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பால்வளத்துறை இயக்குநர் சு.வினீத், பால்வளத்துறை கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் ரா.லட்சுமணக் குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**WANTED**

Safety officer – 1 No
Welfare officer – 1 No

**Qualification and Experience :** As per Factories Act 1948 and TN Factories (Welfare Officers) Rules 1953

**DongWoo Surfacetech (India) Private Limited**
Mappedu, Tiruvallur
Send CV’s to info@dwsi.co.in on or before **25th Sep 2023**



**ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை**

**கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**
பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: எண்.185, 2வது தளம், அண்ணா சாலை, மவுண்ட் ரோடு, சென்னை – 600 006

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டிபைனான்ஷியல் கன்ஸ்யூமர் பைனான்ஸ் இந்தியா லிமிடெட் (CCFIL), கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம்/சார்ஜ் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (கேஎம்பிஎல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 05.03.2022 சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. திரு. D சூர்ய நாராயண் மற்றும் திருமதி பிரேமா ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.15911205–ன் கீழ் 18.09.2023 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.1,00,07,184/–** (ரூபாய் ஒரு கோடியே ஏழு லட்சத்து நூற்று எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் 19.09.2023 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே’’ என்ற அடிப்படையில் 18.10.2023 பகல் 12.00 மணி முதல் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். **குறைந்தபட்ச விலை: ரூ.14,00,000/– (ரூபாய் பதினான்கு லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்).** கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 17.10.2023 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

**சொத்து குறித்த விவரம்:** ப்ளாட் எண். எஸ்–1 மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். இரண்டாவது தளம், 1001 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டது. மற்றும் 2310 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 462 சதுர அடி. (கார் பார்க்கிங் பகுதி 32 சதுர அடி உட்பட). வீட்டு மனை. மனை எண். 24 எஸ்.எம்.எஸ். நகர், எண்.4, ஊரப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம், சர்வே எண். 114/3 பகுதி, வடக்கு: மனை எண். எஸ்–4 தெற்கு: மனை எண். 23 மேற்கு: 30 அடி அகல சாலை மற்றும் கிழக்கு: தனியார் நிலம். விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 70 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 70 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 33 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 33 அடி, சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ஷியாம் நம்பூரி (+91 96772 88418), திரு. வேல்முருகன் கதிர்வேல் (+91 9847118338), திரு. குர்பால் சிங் (+91 8976898212) & திரு. ராஜேந்திர தஹியா (+91 8448264515) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.** விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அதன் லிங்க் http://www.kotak.com/en/bank-auctions.html மற்றும் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் www.kotak.com and/or on https://bankeauctions.com–ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி: 22.09.2023** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**



படிவம் எண்.14
(விதி 33(2)ஐ பார்க்க)
ஒப்புகை சீட்டுடன் கூடிய கையால் வழங்கப்பட்ட பதிவு தபால் பெறப்படாததைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது

**மீட்பு அதிகாரியின் அலுவலகம் – I/II**
**கடன் மீட்பு தீர்ப்பாயம் டெல்லி (DRT 2)**
**4வது தளம், ஜீவன் தாரா பில்டிங், பார்லிமெண்ட் தெரு, புதுடெல்லி – 110 001**

**கோரிக்கை அறிவிப்பு**

**கடன் மீட்பு மற்றும் நொடித்தல் சட்டம், 1993–ன் பிரிவுகள் 25 முதல் 28 வரை மற்றும் வருமான வரிச் சட்டம், 1961–ன் இரண்டாவது அட்டவணையின் விதி 2–ன் கீழ் அறிவிப்பு**

RC/493/2022 26-07-2023

**எடெல்வீஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்**
**எதிர்**
**டாக்டர் ஏஎம் அருண் மற்றும் ஏஎன்ஆர்**

பெறுநர்

**(CD 1) டாக்டர் ஏஎம் அருண் மற்றும் ஏஎன்ஆர்,** 199 செயின்ட் மேரிஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை – 600 018

**(CD 2) டாக்டர் ஏ.எம். அருண் சட்டப்பூர்வ வாரிசுகள் மூலம்**

**(A) திருமதி மீரா அருண், டாக்டர் ஏ.எம் அருணின் மனைவி,** 199 செயின்ட் மேரிஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை – 600 018 **(B) திரு. பாலா யுதிஷ் முருகையா (டாக்டர் ஏ.எம். அருணின் மகன்)** 199 செயின்ட் மேரிஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை – 600 018, **(C) திருமதி. தரணா அருண் (டாக்டர் ஏ.எம். அருணின் மகள்)** 199 செயின்ட் மேரிஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை – 600 018

**(CD 3) திருமதி மீரா அருண், (உத்தரவாததாரர்/அடமானதாரர்),**
199 செயின்ட் மேரிஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை – 600 018

தலைமை அதிகாரி, கடன் மீட்பு தீர்ப்பாயம் டெல்லி (DRT 2) மூலம் **OA/187/2019–**ல் நிறைவேற்றப்பட்ட உத்தரவுகளின்படி வழங்கப்பட்ட மீட்புச் சான்றிதழின் கீழ் **ரூ.1064128152ஐ (ரூபாய் நூற்று ஆறு கோடியே நாற்பத்தோரு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து நூற்று ஐம்பத்திரெண்டு மட்டும்)** வழக்கின்போது மற்றும் எதிர்கால வட்டியுடன் சேர்த்து ஆண்டுக்கு 11% வட்டி வீதம் **29/12/2018 முதல் தொகையை திரும்ப செலுத்தும் காலம் வரையிலான ரூ.150000–ஐயும் (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** சேர்த்து நீங்கள் (கூட்டாக மற்றும் தனித்தனியாக/முழுமையாக/வரையறுக்கப்பட்ட) செலுத்த வேண்டியுள்ளது.

2. நோட்டீஸ் கிடைத்த 15 நாட்களுக்குள் மேற்கண்ட தொகையை செலுத்துமாறு உங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது, தவறினால், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் சட்டம், 1993 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகளின்படி கடன்கள் வசூலிக்கப்படும்.

3. உங்களது சொத்துக்கள் குறித்த விவரங்களை அடுத்த விசாரணை நாளிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஒரு பிரமாணப் பத்திரத்தில் அறிவிக்கும்படி இதன்மூலம் உங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

4. மேலும் நடவடிக்கைகளுக்காக, 06/10/2023 **அன்று காலை** 10:30 மணிக்கு கீழே கையொப்பமிடப்பட்டவர் முன் ஆஜராகுமாறு உத்தரவிடப்படுகிறது.

5. மேற்கூறிய தொகைக்கு கூடுதலாக, நீங்கள் செலுத்த வேண்டியவை:

(a) சான்றிதழ்/செயல்படுத்தல் நடவடிக்கைகளின் இந்த அறிவிப்பிற்குப் பிறகு உடனடியாகத் தொடங்கும் காலத்திற்கு நீங்கள் செலுத்த வேண்டிய வட்டி

(b) இந்த அறிவிப்பின் சேவையைப் பொறுத்தமட்டில் ஏற்படும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் வாரண்டுகள் மற்றும் பிற செயல்முறைகள் மற்றும் நிலுவைத் தொகையை மீட்பதற்காக எடுக்கப்பட்ட மற்ற நடவடிக்கைகளுக்கான செலவுகள்.

தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டு **26.07.2023** தேதியன்று என் கையால் வழங்கப்பட்டது.

முத்திரை

**ஒப்பம்/–**
**மீட்பு அதிகாரி,**
**கடன் மீட்பு தீர்ப்பாயம் டெல்லி** (DRT–2)

நகல் : கடன் மீட்பு தீர்ப்பாயம் டெல்லி (DRT–2)

ஏதேனும் இருந்தால், சான்றிதழ் கடனாளி(கள்) மூலம் செலுத்தப்பட்ட பணம், இந்த வழக்கில் செலுத்த வேண்டிய அனைத்து கடன்களின் ஒருங்கிணைந்த கணக்கில் வரவு வைக்கப்படும் என்று உங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது மற்றும் நிலுவைத் தொகை நிலை குறித்து மீட்பு அதிகாரி தொடர்ந்து வெளியிடுவார்.

அவ்வாறு பராமரிக்கப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கு மீட்பு அதிகாரியின் சரிபார்ப்புக்கு உட்பட்டது. மேற்கூறிய விஷயத்தைப் பொறுத்தமட்டில் மொத்த உரிமைகோரலின் புதுப்பித்த அறிக்கையையும், கடனை வசூலிக்க வேண்டிய சொத்து விவரங்களின் முழு விவரங்களையும் சமர்ப்பிக்குமாறு உங்களுக்கு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.